மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எவ்வளவோ பழமொழிகள் இருக்கின்றன. உங்களுக்குத் தெரிந்த பழமொழிகளை எல்லாம் பேரவையிலே சொல்லி விடக் கூடாது. அது பிறகு பெரிய பிரச்சினையாகிவிடும் வெளியிலே. ஆசிரியர்கள் பிள்ளைகள் புத்திசாலிகள் இல்லையென்று சொல்லுவதுபோல் எம். எல். ஏக்கள் பிள்ளைகளைப்பற்றிச் சொன்னால் எப்படி இருக்கும்?

திரு. கே. எ. வகாப் : அதற்கென்று பழமொழிகள் இருந்தால் சொல்லட்டும். பரிதாபத்திற்குரிய அந்த ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு அந்த ஆசிரியர்களுடைய வருமானம் 2,000-க்கு அதிகமாக இருப்பதால் ஸ்காலர்ஷிப் கிடைப்பதில்லை. ஆகவே, அவர்களுக்கு லோன் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பு அளவுக்கு சாதாரண ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தத் தொகையை உயர்த்துவதற்குத்தனியாகத்தான் பரிசிலிக்க வேண்டும். நிதிநிலையைப் பொறுத்துத் தான் முடிவுகட்ட வேண்டிவரும்.

Reading Room and Bus stand run by Tiruchirappalli Municipality.

*586 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Tiruchirappalli Municipal Council sought the permission of the Government to name its library and bus stop in memory of Mr. Francis and Lourdusamy respectively and ;

(b) if so, the action taken, thereon ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி நகரத்தில் 26-வது தொகுதியில் நகராட்சியால் கட்டப்பட்டிருக்கும் படிப்பகத்திற்கு "திரு. பிரான்சிஸ் நினைவுப் படிப்பகம்" என்று பெயரிட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பேருந்து நிலையத்திற்கு முன்னாள் சேர்மன் ஏ. எஸ். ஜி. லூர்துசாமி பிள்ளை பேருந்து நிலையம் எனப் பெயர் வைக்கக் கோரி வந்துள்ள நகர மன்றத் தீர்மானம் பரிசிலனையில் உள்ளது.

THIRU N. DENNIS: May I know whether the Government would come forward to permit the local bodies to fix the names according to their choice ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது இருக்கிற விதி முறையின்படி நகராட்சிகள் பெயர் மாற்றத்தைப்பற்றித் தீர்மானம்போட முடியுமேதவிர அவர்களாகவே மாற்றிக்கொள்ள முடியாது. அது அரசாங் கத்தின் பொறுப்பாக இருக்கிறது. என்றாலும்கூட நகராட்சி மன்றத்தில் ஏக மனதாகவோ மற்ற வகைகளிலோ தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அதைக் கண்டறிந்து நியாயத்தின் அடிப்படையில் அரசு முடிவுசெய்து அறிவித்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இதுசம்பந்தமாக ஐ.எல்.பி. அவர்கள் பரிந்துரைகள், ரிமார்க்ஸ் அனுப்பி இருக்கிறார்களா? விவரங்களை அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட தீர்மானங்கள் வருகிறபோது கூடுமானவரை ஏகோபித்ததாக இருக்கவேண்டுமென்ற விதி இருக்கிறது. யாரேனும் ஆட்சேபணை தெரிவித்தால் அதுபற்றிய விளக்கங் களைக் கேட்டு அது வந்த பிறகு அரசு தக்க முடிவு எடுக்கும்.

மு.ப. 9-30 **திரு. ஆ. கு. சுப்பையா :** இம்மாதிரித் தனி நபர்கள் பெயர்களை வைப்பதில் விவகாரங்கள் எல்லாம் ஏற்பட்டு பேருந்து நிலையங்கள், அரசாங்க அலுவலகங் கள் எல்லாம் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே இதையெல்லாம் உத்தே சித்துத் தனி நபர்கள் பெயர்களை எதற்கும் வைக்கக்கூடாது என்று அரசு சம் பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஒரு ஆணை பிறப் பிப்பதற்கு இல்லை. ஏனெனில் பல்வேறு வகைகளில் அது மேற்கொள்ளப்படு கிறது. தேசியத் தலைவர்கள் என்ற முறையில் பல்வேறு பெயர்கள் வைக்கப்படு கின்றன. கூடுமானவரை அந்தந்த நகராட்சித் தலைவர்களாக இருக்கின்ற வர்களின் பெயர்களை அங்கு வைக்கக்கூடாது என்றும் கூடுமான வரையில், இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கக்கூடாது என்றும் ஒரு முறை இருந்து வருகிறது. அதுவும் ஒரு மரபேதவிர சட்டதிட்டத்தின் அடிப்படையில் அல்ல. அதைக் கடைபிடிக்கவேண்டும் என்ற தன்மையைத்தான் வலியுறுத்தி வருகிறோம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : பதவியில் இருந்த நகராட்சித் தலைவர்கள் அல்லது உறுப்பினர்கள் பெயர்களை வைக்கிறார்கள். அவைகளை நீக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைச் சட்டதிட்டத்தின்கீழ் நீக்க வழியில்லை. வேண்டுமானால் கேட்டுக் கொள்ளலாமே தவிர சட்டத்தின் அடிப்படையில் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

1973 மார்ச் 31]

திரு. எம். சுரேந்திரன்: வாசகசாலைகள், பேருந்துநிலையங்கள், பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் போன்றவைகளுக்கு எல்லாம் குறைந்தபட்சம் உயிரோடு இருப்பவர்களின் பெயர்களை வைக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது ஒரு கொள்கைப் பிரச்னை. ஏகோபித்து முடிவு எடுக்கவேண்டிய ஒன்று. இப்போதுள்ள நிலைமை யில் சட்டதிட்டத்தின் அடிப்படையில் வற்புறுத்த இயலாது. அப்படி ஒரு முறையைக் கையாள்வது நன்றாக இருக்கும் என்று வேண்டுமானால் சொல்லி வரலாம்.

தொழிலாளர் நலன்பற்றிய கல்வி நிலையம்

* 587 வினா—திரு. கே. ஏ. வகாப்: } திரு. என். டென்னிஸ்: } மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நலன் பற்றிய கல்வி நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்விடத்தில்?

(உ) அதன் நோக்கம் என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நலன்பற்றிய கல்வி நிலையம் சென்னையில் 29—3—1973-ம் நாளன்று துவக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப்: தொழிலாளர் நலன்பற்றிய கல்வி நிலையம் அமைப் பது வரவேற்கத்தக்கது. "தொழிலாளர் துறை அதிகாரிகளுக்கு முறையாகப் பயிற்சி அளிப்பது, தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைமையை ஏற்று நடத்த தங்களுக்குள்ளாகவே ஒருவரைத் தயாரிப்பதற்கு தொழிலாளர் குறித்த சட்டங்கள்பற்றியும், தொழிலுறவு குறித்தும் தொழிலாளர்களுக்கு வகுப்பு நடத்திப் பயிற்றுவிப்பது" என்று கூறியிருக்கிறார்கள். இது எல்லா விதமான தொழில்களுக்கும் சம்பந்தப்பட்டதா? அல்லது குறிப்பிட்ட தொழில்களுக்குத்தானா? நெசவுத் தொழில், பீடித் தொழில் போன்ற பல தொழில்கள் உள்ளன. அப்படிப்பட்ட தொழில்களில் உள்ள தொழிலாளர் களுக்கும் இதில் வாய்ப்பளிக்கப்படுமா?

---

* (134-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது)